Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon

An AIChE Technology Alliance
CCPS
Center for Chemical Process Safety
aiche.org/ccps

This issue sponsored by
ioMosaic®
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# சர்வதேச செயல்முறை பாதுகாப்பு வாரம் அறிவிப்பு!!

**November 2024**




உலகெங்கிலும் உள்ள செயல்முறை பாதுகாப்பு சமூகங்கள் ஒன்றிணைந்து 2024 , டிசம்பர் 2 முதல் 6 ம் தேதி வரை முதலாவது சர்வதேச செயல்முறை பாதுகாப்பு வாரமாக [IPSW] வழங்க ஒருங்கிணைந்துள்ளன . செயல்முறை பாதுகாப்பிற்கு இடைவிடாத விழிப்புணர்வு தேவை. IPSW இந்த விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காகவும், கடந்தகாலங்களில் நடந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் பற்றியும், மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களை பற்றியும் நமக்கு நினைவூட்டுவதாகவும் இருக்கும். IPSW "செயல்முறை பாதுகாப்பு சம்பவங்கள் இல்லாத உலகத்தை" அடைய, தொடர் முன்னேற்றத்திற்கான நமது எண்ணங்களையும் அர்ப்பணிப்பையும் ஒருங்கிணைக்க உதவும்.

CCPS செயல்முறை பாதுகாப்பு பீக்கான் மற்றும் பிற வாசகர்கள் இந்த தனித்துவமான ஆன்லைன் நிகழ்வில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த நிகழ்விற்கான அனுமதி இலவசம், ஆனால் முன் பதிவு அவசியம் . கீழே உள்ள QR குறியீடு உங்களை பதிவு செய்யும் பக்கத்திற்கு கொண்டு செல்லும்.நமது கடந்தகால நிகழ்வுகளில் கற்றவைகளைப் பற்றி சிந்திக்கவும், செயல்முறைப் பாதுகாப்பின் முன்னேற்றத்திற்காக ஒன்றாகச் செயல்படவும் உறுதியளிக்க இது ஒரு மதிப்புமிக்க வாய்ப்பாகும். நாம் அனைவரும், அடைய விரும்பும் பொதுவான குறிக்கோள்: கற்றுக்கொள்ளல் மற்றும் மேம்படுத்துதல். அபாயகரமான நடவடிக்கைகளின் விளைவு-களிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க, நாம் சேர்ந்து ஒத்துழைப்பது முன்னெப்போதையும் விட முக்கியமானதாகும்

REGISTER HERE

## உங்களுக்கு தெரியுமா?

- CCPS மற்றும் பிற செயல்முறைப் பாதுகாப்பு நிறுவனங்கள் 2024, டிசம்பர் 2 முதல் 6 ம் தேதி வரை, சர்வதேச செயல்முறை பாதுகாப்பு வாரத்தில் (IPSW) நமக்கு கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. லிங்க் : www.aiche.org/ccps/ipsw .
- செயல்முறை பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும், செயல்முறை பாதுகாப்பு சரியாக நிர்வகிக்கப்படாவிட்டால் என்ன நடக்கும் என்பதையும் நாம் நினைவில் வைப்பதே இந்த வாரத்தின் நோக்கம் ஆகும் .
- பல நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை மாற்றியமைக்க மற்றும் அவர்களின் கலாச்சாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க சம்பவங்களை கொண்டுள்ளன . உங்கள் நிறுவனமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளை எதிர்கொண்டிருக்கலாம். இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க, நீங்கள் குறிப்பிட்ட கொள்கைகள் அல்லது நடைமுறைகளை வைத்திருக்கலாம்.
- செயல்முறை பாதுகாப்பு நிகழ்வுகள் அனைத்து அளவிலான நிறுவனங்களிலும், உணவு மற்றும் கூழ் மற்றும் காகிதம் போன்ற "ரசாயன உற்பத்தியாளர்களாக" கருதப்படாத நிறுவனங்களிலும் நடக்கும்.
- சம்பவம் குறித்த விசாரணைகள், சம்பவம் ஏற்பட காரணமாக இருந்த சிஸ்டம் தோல்விகள் மீது கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நிகழ்விலும் கற்றுக்கொண்ட பாடங்களை சரியாக ஆவணப்படுத்தப்பட்டு,அதனை செயல்படுத்தப்பட்டிருந்தால் மீண்டும் ஒரு சம்பவத்தைத் தடுக்க உதவும்

## நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

- உங்கள் யூனிட் எந்த IPSW நிகழ்வுகளில் கலந்துகொள்கிறது என்பதனை உங்கள் மேற்பார்வையாளரிடம் கேளுங்கள். IPSW வாரம் நிறைவுற்ற பிறகு , பல விளக்கக்காட்சிகள் உங்கள் பார்வைக்குக் வழங்கப்படும் .
- உங்கள் நிறுவனத்தின் கடந்த காலங்களில் தீவிரமான செயல்முறைப் பாதுகாப்புச் சம்பவங்கள் நடந்திருக்கலாம். அந்த சம்பவம் பற்றி உங்கள் மேற்பார்வையாளரிடமோ அல்லது சில சீனியர்களிடமோ கேளுங்கள். இத்தகைய நிகழ்வுகளில் இருந்து வரும் படிப்பினைகள் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் கலாச்சாரத்தை வடிவமைக்கின்றன. இந்தப் பாடங்களைப் பற்றி விவாதிப்பது, தினசரி செயல்பாடுகளுக்கு செயல்முறைப் பாதுகாப்பு ஏன் அவசியம் என்பதை வலுப்படுத்தும். .
- இணையத்தில் தேடினால் கடந்த கால சம்பவங்களில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களை நாம் அறிய முடியும். அவற்றில் பல மதிப்பாய்வு செய்ய ஒரு அறிக்கையை கொண்டு இருக்கின்றன.
- உங்கள் தினசரி பாதுகாப்பு செய்திகளில் , உங்கள் நிறுவனம் அல்லது அண்டை நிறுவனங்களில் நடந்த சம்பவங்களை மையப்படுத்துங்கள்

**எங்களுடன் ஒருங்கிணைந்து , ஏற்படக்கூடிய செயல்முறை பாதுகாப்பு சம்பவங்களை எவ்வாறு தடுப்பது என்பதை அறிந்து கொள்ளுங்கள்**

©AIChE 2024. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or +1 646-495-1371.